செய்தி மாலை

தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம்

மடல்-55 ஜூலை 2025



ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு
ஒற்றுமை நீங்கில்
நம் அனைவர்க்கும் தாழ்வே



ஒன்றிய அரசின்
மக்கள் விரோத
தொழிலாளர் விரோத
பொதுத்துறை விரோத
கொள்கைகளை கண்டித்து

நாடு தழுவிய பொது வேலை நிறுத்தம்

9-7-2025

20 கோடி தொழிலாளர் மற்றும் விவசாயிகள்
பங்கேற்கும்
அனைத்து தொழிற்சங்க அறைகூவல்
அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் பங்கேற்பு

ஒன்றுபட்டு போராடுவோம்

வேலை நிறுத்தத்தை வெற்றியாக்குவோம்

புறப்படு தோழா

தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின்

24வது மாநில மாநாடு - சிறப்பான வெற்றி



- **எழிலார்ந்த வகையில் நடைபெற்ற தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் 24வது மாநாடு!**
- **துவக்க விழா நிகழ்ச்சியில் 1500 தோழர்கள் பங்கேற்பு!**
- **505 பக்கங்களை கொண்ட பொதுச் செயலாளரின் விரிவான அறிக்கை!**
- **69 தோழர்கள் பங்கேற்ற விவாதங்கள்!**
- **31 தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றம் – மற்றுமொரு வரலாறு படைத்த மாநாடு!**

தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் 24வது மாநாடு 2025 ஜூன் 22, 23 தேதிகளில் சென்னையில் மிகுந்த எழுச்சியுடன் நடைபெற்றது. ஜூன் 22 காலை 9.30 மணியளவில் தோழர். சி.எச். வெங்கடாசலம், தோழர் ராஜன் நாகர் உள்ளிட்ட AIBEA தலைவர்கள் மற்றும் 1500-க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள், பார்வையாளர்கள், சிறப்பு விருந்தினர்கள் ஆகியோர் முன்னிலையில் HDFC வங்கியில் ஒப்பந்த ஊழியராக பணியாற்றும் Contract Employee தோழர். சுரேஷ் AIBEA கொடியை தோழர்களின் விண்ணதிரும் முழக்கங்களுக்கிடையே ஏற்றி வைத்தார்.


சாதாரண ஒரு தொண்டரையும் சமமாக கருதி இத்தகைய கவுரவத்தை அவருக்கு அளித்தது அனைவராலும் பாராட்டப்பட்டது. இனிவரும் காலங்களில் ஒப்பந்த ஊழியர்களின் உரிமைகளுக்காக AIBEA போராடும் என்பதை இது எடுத்துக்காட்டியது.



கொடியேற்றத்தை தொடர்ந்து தியாகிகள் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்திய பின் தோழர்கள் அனைவரும் ஊர்வலமாக அரங்கிற்குள் சென்றனர்.



காலை 9.55 மணியளவில் மாநாட்டு துவக்க விழா நிகழ்ச்சிகள் சங்கப் பாடல்களுடன் ஆரம்பித்தன.



இத்துவக்க விழா நிகழ்ச்சிக்கு தோழர். சி. எச். வெங்கடாசலம் அவர்கள் தலைமையேற்க, சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தோழர். இ. அருணாச்சலம் அவர்கள் வரவேற்புரை-யாற்றினார்.

AIBEA தலைவர் தோழர். ராஜன் நாகர் இம்மாநாட்டை துவக்கி வைத்து உரையாற்றுகையில் வங்கித்துறை இன்று எதிர்கொண்டுவரும் பல்வேறு பிரச்சனைகளை குறிப்பிட்டு அதை AIBEA மிக சரியான வகையில் கையாண்டு வருவதையும் விளக்கினார்





நம் இயக்கத்தின் மாபெரும் தலைவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது

மாநாட்டில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட தோழர். பி.எஸ். ராம்பாபு அவர்கள் தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம் நாட்டிலுள்ள அனைத்து மாநிலங்களிலுள்ள AIBEA மாநில அமைப்புகளுக்கு எடுத்துக்காட்டு சம்மேளனமாக செயல்பட்டு வருவதையும், அகில இந்திய அளவில் AIBEA-ன் தலைமை பொறுப்பு கடந்த 22 ஆண்டுகளாக நமது மாநிலத்தில் இருப்பதையும் பலத்த கரவொலிகளுக்கிடையே பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.



இம்மாநாட்டை வாழ்த்தி பேசிய AITUC தமிழ்நாடு பொதுச் செயலாளர் தோழர்.எம் இராதாகிருஷ்ணன் அவர்கள் நூற்றாண்டுகள் கடந்த AITUC-யும், 80 ஆண்டு வரலாறு கொண்ட AIBEA-யும் மிகுந்த புரிதலோடு ஒன்றிணைந்து செயல்பட்டு வருவதை எடுத்துரைத்தார்.

இம்மாநாட்டில் கேரளா மாநில வங்கி ஊழியர் சம்மேளன பொதுச் செயலாளர் தோழர்.பி.ராம்பிரகாஷ், கர்நாடக மாநில வங்கி ஊழியர் சம்மேளன பொதுச் செயலாளர் தோழர். எம். ஜெயாநாத், AIBEA இணைச் செயலாளர் தோழர். வி.உதயகுமார், AIBOA இணைச் செயலாளர் தோழர். ஷாம் சுந்தர் தவே, AIBEA தனியார் வங்கியின் Convener தோழர்.ஏ.ஆர்.சுஜித்ராஜீ ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

இம்மாநாட்டில் மலேசிய நாட்டிலிருந்து 6 தோழர்கள் சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்றனர்.



இம்மாநாட்டின் முக்கிய நிகழ்வாக AIBEA பொதுச் செயலாளர் தோழர். சி.எச்.வெங்கடாசலம் அவர்களும், அவரது மனைவியாரும் தங்களது ஆயுட்காலத்திற்கு பின்பு தங்களது உடலை சென்னை அரசு மருத்துவமனைக்கு ஆய்வுக்காக வழங்குவதாக உறுதிக் கடிதங்களை மருத்துவர்களிடம் அளித்தனர்.








LOOT
AIBEA
Zindabad
24th
conference
TNBEF
22th - 23th June, 2025 - Chennai


LOOT
AIBEA
Zindabad
24th
conference
TNBEF
22th - 23th June, 2025 - Chennai


LOOT
AIBEA
Zindabad
24th
conference
TNBEF
22th - 23th June, 2025 - Chennai


LOOT
AIBEA
24th
conference
TNBEF
22th - 23th June, 2025 - Chennai


AIBEA
Zindabad
AIBEA is a mass organisation of the bank employees by the bank employees and for the bank employees
24th
conference
TNBEF




Books for Sale


UNION is our Shield


Merge Regional Rural
Bring all Private Banks



மதிய உணவிற்கு பின்பு நடைபெற்ற பிரதிநிதிகள் மாநாட்டில் சுமார் 1200 தோழர்கள் பிரதிநிதிகளாகவும், பார்வையாளர்களாகவும் பங்கேற்றனர். சம்மேளன வரலாற்றில் முதல் முறையாக கூட்டுறவு வங்கிகளிலிருந்து 220 தோழர்கள் இதில் பிரதிநிதிகளாகவும், பார்வையாளர்களாகவும் பங்கேற்றதை தலைவர் தோழர். சி.எச். வெங்கடாசலம் அவர்கள் பெருமையுடன் அறிவித்தார்.

இப்பிரதிநிதிகள் மாநாட்டில் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தோழர்.இ.அருணாச்சலம் அவர்கள் 505 பக்கங்கள் கொண்ட தனது அறிக்கையை பிரதிநிதிகள் முன்பு சமர்ப்பித்து விளக்கவுரை-யாற்றினார்.

இந்த அறிக்கையுடன் தமிழ்நாடு கூட்டுறவு வங்கி ஊழியர் சங்கத்தின் செயல்பாடுகளை கொண்ட அறிக்கை ஒன்றும் இணைப்பாக சமர்ப்பிக்கப்பட்டது.

ஜீன் 23 அன்று காலை 9.30 மணியளவில் மீண்டும் துவங்கிய பிரதிநிதிகள் மாநாட்டில் 69 தோழர்கள் விவாதங்களில் பங்கேற்று தங்கள் கருத்துக்களை தெரிவித்தனர். இதன் மீதான பொதுச் செயலாளர் பதிலுரைக்கு பின்பு பொதுச் செயலாளர் அறிக்கை ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இம்மாநாட்டில் மொத்தம் 31 தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன. மேலும் சம்மேளனத்தின் 6 ஆண்டுகளுக்கான வரவு, செலவு கணக்குகளும் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

மாநாட்டின் இறுதியாக கீழ்கண்ட தோழர்கள் சம்மேளனத்தின் புதிய நிர்வாகக் குழுவிற்கு தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அவைத் தலைவர்	ஜி. வைரப்பன்	கூட்டுறவு வங்கி
தலைவர்	ஏ. சிதம்பரம்	யூனியன் வங்கி
துணை தலைவர்கள்	சி.எச். வெங்கடாசலம்	சென்ட்ரல் வங்கி
	எல். சங்கரவடிவேலு	பஞ்சாப் நேஷனல் வங்கி
	ஏ.சு ப்ரமணியன்	நகர கூட்டுறவு வங்கி
	எஸ்.மீ ரா	இந்தியன் வங்கி
	டி. சேகர்	கரூர் வைஸ்யா வங்கி
	ஆர்.கே. பாண்டியன்	இந்தியன் வங்கி
பொதுச் செயலாளர்	இ. அருணாச்சலம்	இந்தியன் வங்கி
செயலாளர்	ஆர்.கா ர்த்திக்	கனரா வங்கி
இணைச் செயலாளர்கள்	பி.சி. ஸ்ரீதர்	பாங்க் ஆப் இந்தியா
	கே. கௌதம்	கனரா வங்கி
	எல்.மு ரளி	யூகோ வங்கி
	என். நவீன்குமார்	கனரா வங்கி
	ஆர். ஜெயபிரகாஷ்	இந்தியன் வங்கி
	டி. சுரேஷ்	கூட்டுறவு வங்கி KK Dist
	இ. நாகேந்திரன்	யூனியன் வங்கி
	ஜே. விஜயலட்சுமி	யூனியன் வங்கி
	கே.பி. சாய்குமார்	பரோடா வங்கி
	கே. பிரகாஷ்	பரோடா வங்கி
	எம். சண்முககாளிதாஸ்	சென்ட்ரல் வங்கி
	வி. ராமகிருஷ்ணன்	ஸ்டேட் வங்கி
	எம். மோகனா	பஞ்சாப் நேஷனல் வங்கி
	சி. முரளி	கோவை மாவட்டம்
	ஆர். சிவ பெருமாள்	திருச்சி மாவட்டம்
	சி.ஆர். கு மரன்	மதுரை மாவட்டம்
	சண்முக சுந்தரம்	திருநெல்வேலி மாவட்டம்
பொருளாளர்	கே. ஸ்ரீகிருஷ்ணா	வங்கி நிதி வசூலிப்போர் சங்கம்
இணைப் பொருளாளர்	ஆர். முத்துலட்சுமி	கனரா வங்கி

சிறப்பு அழைப்பாளர்கள்

1. எஸ்.டி.சீனிவாசன்
2. கே.விஜயன்
3. வி.ரகுராமன்
4. எஸ்.ராதாகிருஷ்ணன்
5. டி.பி.கோபி நாத்
6. கே.சத்திய நாராயணா
7. ஆர்.கோவிந்தராஜ்

இதைத்தவிர பல்வேறு சிறப்பு குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன. அதில் மகளிருக்கான பிரிவிற்கு தோழியர் ஜே.விஜயலட்சுமி (யூனியன் வங்கி) மற்றும் ஆர். முத்துலட்சுமி (கனரா வங்கி) பொறுப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இம்மாநாடு பல்வேறு வகைகளில் சிறப்புமிக்கதாக அமைந்தது. கூட்டுறவு வங்கி ஊழியர்களின் பிரச்சனைகள் விரிவாக விவாதிக்கப்பட்டதுடன், அவற்றிற்கு தீர்வு காண வணிக வங்கி ஊழியர்களும், கூட்டுறவு வங்கி ஊழியர்களும் ஒன்றிணைந்து போராடுவதென்றும், வரும் ஆகஸ்ட் இறுதிக்குள் சென்னையில் இணைந்த தர்ணா போராட்டம் நடத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

வரும் காலங்களில் தமிழகத்தில் வங்கி ஊழியர்கள் ஆற்றவேண்டிய பணிகள் குறித்து சம்மேளனத்தின் மாநாடு தெளிவுற முடிவெடுத்துள்ளது. சம்மேளனத்தின் நிர்வாகக்குழுவில் இளந்தோழர்கள் பலரை தலைமைப் பொறுப்புகளுக்கு தேர்ந்தெடுத்துள்ளது சம்மேளனத்தின் தொலை நோக்கு சிந்தனையை வெளிக்காட்டுகிறது.


மாநாட்டில் பங்கேற்ற அனைத்து தோழர்களையும் சிறப்பான முறையில் வரவேற்று உபசரித்த வரவேற்பு குழுவினர்க்கு பங்கேற்ற தோழர்கள் அனைவரும் வாழ்த்து தெரிவித்தனர். நடைபெற்று முடிவடைந்த இந்த 24வது மாநாடு மற்றுமொரு திருப்புமுனை மாநாடாக அமைந்தது.




With AIBEA we a
heroes,without o
union,we will b
zero.Always
gthen ou
union
Com N San
AIBEA
24th
conference
TNBEF
22th - 23th June, 2025 - Chennai


"I am a ma
all that
ma
concer
-Bhaga
AIBEA
24th
conference
TNBEF
22th - 23th June, 2025 - Chennai


AIBEA


Unite & Fight
Anti-people Economic Policies
Anti-Worker Labour Reforms
Unite & March on
Nationwide General Strike
By 15 Crores Workers on 9th JULY, 2025
AIBEA
AIBEA Zindabad


AIBEA
Com. N.SAMPATH
- 20.11-2014)


தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம்
24 வது மாநில மாநாடு
22 & 23 ஜூன் 2025, சென்னை
AIBEA
Never fall a victim to the game of disunity because it is difficult to get up once you fall
-Com Prabhat Kar
Never fall a victim to the game of disunity because it is difficult to get up once you fall
-Com Prabhat Kar


தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம்
24வது மாநில மாநாடு
சென்னை – ஜூன் 22 & 23, 2025
AIBEA
AIBEA
அன்புடன் வரவேற்கிறோம்
உறுதி கொண்ட நெஞ்சினாய் வா! வா! வா!
தெளிவு பெற்ற மதியினாய் வா! வா! வா!
Welcome You All
ஒற்றுமைக்குள் உய்யவே
நாடெல்லாம் ஒரு பெருஞ்செயல் செய்வாய் வா! வா! வா!